**கடையநல்லூர் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம்– 2019ம் ஆண்டு மாதம் 29ம் தேதி திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது.**

**பொருள் எண்– 1**

இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் முற்றிலும் சேதமுற்ற சாலைகளை கணக்கீட்டு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ள சாலை பணிகளை ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் (IUDM)-2018–19ன் கீழ் மேற்கொள்ள Minutes of the Third Project Sanctioning and Monitoring Committee meeting under Integrated Urban Development Mission (IUDM) 2018–2019 held on19.12.2018 அன்று அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ ல் | அகலம் மீட்டரில் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.26 மேலக்கடையநல்லூர் மேற்கு மலம்பாட்டை சாலை செயினேஜ் அளவு 1.20 கி.மீ முதல் 4.00 கி.மீ வரை தார்சாலை அமைக்கும் பணி. | 2.800 | 5.00 மீ | 137.40 |
| 2 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் பழைய உரக்கிடங்கு முதல் நகராட்சி குடிநீர் தலைமைப்பணிடத்தை இணைக்கும் இணைப்பு சாலை தார்சாலை அமைக்கும் பணி. | 3.250 | 4.50 மீ | 178.00 |
| 3 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 25 கற்பகசுந்தரவிநாயகர் கோவில் தெரு, வார்டு எண். 33 கொழும்பு தெரு, வார்டு எண். 13 ஆசாத் தெரு, வார்டு எண்.22 இந்திரா நகர் புதிய காலனி தென்வடல் தெரு, வார்டு எண்.29 மதினாநகர் பிரதான தெரு மற்றும் வடக்குத் தெரு, வார்டு எண்.24 மாதாங்கோவில் தெரு, வார்டு எண்.25 பஜனைமடம் தென்வடல் தெரு, வார்டு எண்.6 முத்தாரம்மன்கோவில் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.27 தெற்கு ரத வீதி ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.495 | 4.00 மீ முதல் 6.00மீ வரை | 168.10 |
| 4 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.18(ம)20 அய்யாபுரம் தெற்குத்தெரு, வார்டு எண்.20 அட்டக்குளம் தெரு, வார்டு எண். 19 (ம) 20 பெரியதெரு, வார்டு எண்.16(ம) 20 புதுத்தெரு, வார்டு எண்.15 பரசுராமபுரம் வடக்குத்தெரு, வார்டு எண்.9 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.5 கிருஷ்ணன்கோவில் தெரு, வார்டு எண்.14 அல்லி மூப்பன் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் தென்வடல் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.225 | 4.00 மீ முதல் 6.00மீ வரை | 170.20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 2 மிட்டா ஆபிஸ் தெரு, வார்டு எண். 32 ரகுமானியாபுரம் தென்வடல் தெரு, வார்டு எண். 28 (ம) 31 அழகுமகுதணன் தென்வடல் தெரு, வார்டு எண். 30 ரைஸ்மில் தெரு, வார்டு எண். 21 காளியம்மன்கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.11 தந்தை பெரியார் தெரு, வார்டு எண். 12, 13 (ம) 14 குசவன் குன்று தென்வடல் தெரு, வார்டு எண்.11 பிள்ளையார் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.3 வ.உ.சி தெரு மற்றும் வார்டு எண்.4 செவல்விளைத்தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.905 | 4.00 மீ முதல் 5.00மீ வரை | 172.25 |
| 6 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 31 காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.10 காளியம்மன் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண். 17 புதூர் பள்ளிக்கூடம் தென்வடல் தெரு, வார்டு எண். 7 சேனையர் தெரு, வார்டு எண். 9 இல்லத்தார் வடக்குத் தெரு , வார்டு எண். 10 பள்ளிவாசல் தென்வடல் தெரு , மாவடிக்கால் மந்தை தென்வடல் தெரு, வார்டு எண்.11 மாவடிக்கால் சுடுகாடு ரோடு, வார்டு எண்.17 முப்புடாதியம்மன் கோவில் தெரு, வார்டு எண்.12 கல்வத்நாயகம் தெரு , வார்டு எண்.13 அல்லி மூப்பன் தெரு, வார்டு எண். 19 கலந்தர் மஸ்தான் தெரு மற்றும் வார்டு எண்.18 பெண்கள் பள்ளிக்கூடம் தெற்குத் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.292 | 4.00 மீ முதல் 7.00மீ வரை | 174.05 |
| | **மொத்தம்** | **19.967** | | **1000.00** |

ஆகவே இந்நகராட்சிப்பகுதியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)** 2018–19ன் கீழ் ரூ.1000.00 இலட்சம் மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்ட சாலைப்பணிகளை மேற்கொள்ள அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3937/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 01</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 2</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 குமந்தாபுரம் பகுதியிலுள்ள 2 குடிநீர் மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றும் 5’’AC பம்பிங் குழாய் தேசிய நெடுஞ்சாலையில் (2 வது வார்டு) முப்புடாதியம்மன் கோவில் மேல்புறம் பாலம் அகலப்படுத்தும் வேலைக்காக தோண்டும் போது உடைந்துவிட்டது. இதனால் இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.1 குமந்தாபுரம் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் ஜனவரி 15 மற்றும் 16ம் தேதிகளில் பொங்கல் பண்டிகை நடைபெற உள்ளதால் மேற்காணும் பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய பம்பிங் குழாய் உடைப்பை சரி செய்ய வேண்டியது அவசியமாகிறது. எனவே புதிய 6’’ GI குழாய் சுமார் 60’0’’ நீளத்திற்கு பதித்து பழைய 5’’AC பம்பிங் குழாயுன் இணைப்பு செய்யும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.10 இலட்சத்திற்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டும் இந்நகராட்சி தனி அலுவலர் 02.01.2019 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 19/2019/இ1)**

**<u>தீர்மானம் எண். 02</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 3</u>**

கடையநல்லூர் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)**-2018–19ன் கீழ் போகநல்லூர் உரக்கிடங்கிடங்கில் 40KLD அளவில் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் ( Faecal Sludge Treatment Plant ) அமைக்கும் பணியினை ரூ.**400.00** இலட்சம் மதிப்பீட்டிற்கு மேற்கொள்ள சென்னை தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் எண்.**26888/2018/**DO1 நாள். **03.12.2018**ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கு **22.01.2019**ம் தேதி அன்று மாநில அளவிலான மறு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரபெற்றது. மேலும் ஆன்லைனில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படவில்லை.

1. திரு.U.சேக்அப்துல்காதர்,
   ஒப்பந்தக்காரர்,
   கடையநல்லூர்.

2. திரு.S.சேக்உதுமான் கக்கீம்,
   ஒப்பந்தக்காரர்,
   கடையநல்லூர்.

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் (Technical Bid) தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி (Technical Responsive) பெற்றுள்ளதால், அரசு திட்டபணியாக இருப்பதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி **28.01.2019** அன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்த விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/ குறைவு |
|---|---|---|---|---|
| | கடையநல்லூர் நகராட்சி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)**-2018–19ன் கீழ் போகநல்லூர் உரக்கிடங்கிடங்கில் 40KLD அளவில் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் ( Faecal Sludge Treatment Plant ) அமைக்கும் பணிக்கு. | 400.00 | திரு.U.சேக்அப்துல்காதர், ஒப்பந்தக்காரர், கடையநல்லூர்.<br>திரு.S.சேக்உதுமான் கக்கீம், ஒப்பந்தக்காரர், கடையநல்லூர். | 4.96% கூடுதல்<br>6.24% கூடுதல் |

மேற்காணும் பணிக்கு விலை விகிதம் மதிப்பீட்டைவிட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்தக்காரரிடம் விலை குறைப்பு செய்து 24 மணி நேரத்திற்குள் தருமாறு கோரியதில், **28.01.2019**ம் தேதி அன்றே ஒப்பந்தகாரர் கடிதத்தில் கூலி உயர்வு மற்றும் மார்க்கெட்டில் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதாக கூறி 4.96% மதிப்பீட்டை விட 4.90% **(0.06%)** கூடுதலாக விலை குறைப்பு செய்து பணி செய்துவதற்கு சம்மத கடிதம் கொடுத்துள்ளார். ஆகவே மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மதிப்பீட்டை விட 4.90% கூடுதலாக கொடுத்துள்ள திரு.U.சேக்அப்துல்காதர், ஒப்பந்தக்காரர், கடையநல்லூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்ய மன்ற அனுமதிக்கு சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4026/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 03</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–4</u>**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர், அவர்களின் 04.12.2018ம் தேதிய உத்திரவு எண்.28369/ஜே3/2018ல் இந்நகராட்சிக்கு புதிதாக 89 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் கூடுதலாக அனுமதித்து இவர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் (Contract basis through out source) மூலம் மேற்கொள்ள உத்திடவிட்டுள்ளதின் அடிப்படையில் புதிதாக 89 துப்புரவு பணியாளர்கள் பணியிடம் தோற்றுவித்துக்கொள்ளவும், இதன் பொருட்டு ஏற்படும் சம்பளம் மற்றும் இதர செலவினங்களுக்கு ஆண்டுக்கு ரூ. 180.00 இலட்சம் உத்தேச செலவினத் தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இதன் பொருட்டு ஒப்பந்ததாரரை (out source) தேர்வு செய்ய விளம்பரம் செய்யும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 3844/2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 04</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்– 5</u>**

2017–18ம் ஆண்டின் உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையினை தட்டச்சு செய்து 5 பிரிதிகள் ஒளி நகல் எடுத்து பைண்டிங் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குநர் அலுவலகம், திருநெல்வேலிக்கு வழங்கிய வகைக்கு ஆன செலவுத்தொகை ரூ.4780/–ஐ வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது. மேற்படி தணிக்கை அறிக்கைகள் உடனடியாக அனுப்ப வேண்டியது இருப்பதால் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் தணிக்கை அறிக்கையினை தயார் செய்து அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4260/2014/அ3)**

**<u>தீர்மானம் எண். 05</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–6</u>**

அ) 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டின் உள்ளாட்சி நிதி தணிக்கை கட்டணம் 59131+53302=ரூ.112433/–(ஒரு லட்சத்து பன்னிரெண்டாயிரத்து நானூற்றி முப்பத்தி மூன்று மட்டும்) அரசு கணக்கில் செலுத்த அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

ஆ) 2016–17 மற்றும் 2017–18ம் ஆண்டின் உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது. மேலும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பேரில் மேற்கண்ட தொகை அரசு கணக்கில் செலுத்த நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4260/2014/அ3)**

**<u>தீர்மானம் எண். 06</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–7</u>**

அரசாணை (நிலை) எண்.84 சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை (EC2) நாள்.25.06.2018 மூலம் ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்களுக்கான உற்பத்தி, சேமித்தல், விற்பனை ஆகியவைகளை 01.01.2019 முதல் தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளளதன் பொருட்டு திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 18.12.2018ம் தேதிய ந.க.எண்.அ4/2434/2018 கடிதத்தில் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையில் அவசர அவசிய தேவைவை முன்னிட்டு பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணி விபரம் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் ஒப்பந்தத் தொகை ரூ. | | |
|---|---|---|---|---|
| | | பி.ஆயிஷா | ஏ.பி.எம்.ஏ. காஜா | கே.எஸ்.அப்துல் மாலிக் |
| 1. | பிளாஸ்டிக் விழிப்புணர்வு வாசகம் அடங்கி டி சர்ட் ஒன்றிற்கான விலை | 500 | 428 | 560 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | விழிப்புணர்வு பேனர் துணியில் (உயரம் 8'x அகலம் 4') ஒன்றிற்கான விலை | 1200 | 1100 | 1350 |
| 3. | விழிப்புணர்வு பேரணி மற்றுறும மனித சங்கிலியை போட்டோ மற்றும் வீடியோ எடுத்தல் | 7000 | 6000 | 7250 |
| 4. | விழிப்புணர்வு வாசகம் அடங்கிய கலர் பிரிண்ட் நோட்டீஸ் 20000 எண்ணம் அச்சடிக்க 100 எண்ணத்திற்கு | 1800 | 1600 | 1900 |
| 5. | பிளாஸ்டிக் விழிப்புணர்வு வாசகம் அடங்கிய சுவர் விளம்பரம் ஒரு சதுர அடிக்கான விலை | 80 | 60 | 90 |

இதில் குறைவான விவில அளித்துள்ள திரு.ஏ.பி.எம்.ஏ.காஜா என்பவரின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கவும் மற்றும் அவசர அவசிய தேவை முன்னிட்டு தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 1985/2016/எச்1)**

<u>தீர்மானம் எண். 07</u>

அங்கீகரிக்கப்படுகிறது.

<u>பொருள் எண்–8</u>

இந்நகராட்சி தலைமை பணியிடத்தில் 18.07.2018 அன்று ஏற்பட்ட தொடர் மழை காற்றாற்று காரணமாக தலைமை பணியிடம் மற்றும் அங்குள்ள Collections well–ல் உள்ள மோட்டார் அனைத்தும் EB Voltage variation ஏற்பட்டு கீழ்காணும் இடங்களில் Motod Starter மற்றும் cable–கள் பழுதாகி உள்ளது.

<u>I) பெரிய நாயகம் கோவில் அருகில் உள்ள கிணறுகள்</u>

**<u>MP Fund well</u>**

1) 12.5HP Submotor with sttrter -1 Nos
2) 3.00HP Submotor -1 Nos

**<u>New Open well</u>**

7.5 HP Submotor - 1 Nos
with starter cable - 1 Nos

**<u>Twad well & Sump</u>**

1) 15.00 HP Submotor –1 Nos
2) 3.00 HP Sub motor – 2 Nos

**<u>II) Errandhthu Mukku Infiltration well and MLA Fund open well</u>**

1) 7.5 HP Submotor -3 Nos
2) 5.00 HP Submotor -3 Nos
starter, cable

**<u>III – Kallaru Well</u>**

3.00 HP Sub motor with starter – 3 Nos

**IV)<u>Head works</u>**

35 HP starter(S/D)- 1NOS

மேற்காணும் பகுதியில் உள்ள இடங்களில் இதுவரை ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகமாக இருந்ததால் குடிநீர் பணிகள் செய்ய முடியாத நிலை இருந்தது. தற்போது ஆற்றில் தண்ணீர் குறைந்துவிட்டதால் குடிநீர்

பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் மேற்காணும் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 19/2019/இ1)**

**<u>தீர்மானம் எண். 08</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–9</u>**

இந்நகராட்சி பகுதியில் டெங்கு நோயை பரவாமல் இருக்க நல்ல தண்ணீரில் வளரும் ஏடீஸ் வகை கொசுப்புழு உற்பத்தியை தடுத்திட பயன்படுத்தக்கூடிய குளோரின் திரவம் (Chlorrne LiQuid) தற்போது இருப்ப இல்லாததால் அவசர அவசியம் தேவையை முன்னிட்டு 100 லிட்டர் குளோரின் திரவம் வாங்கிடவும் இதற்கான செலவினம் ரூ.5000/– அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் பொதுசுகாதார அவசரஅவசியம் கருதி தனி அலுவலர் 12.11.2018 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் மேற்காணும் குளோரின் திரவம் வாங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4603 /2018/எச்1)**

**<u>தீர்மானம் எண். 09</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–10</u>**

சட்டமன்ற உறுப்பினர் கடையநல்லூர் சட்டமன்றத்தொகுதி அவர்களிடம் இந்நகராட்சிப்பகுதியிலுள்ள பொதுமக்கள் நேரடியாக சென்று தங்கள் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுத்து தர வேண்டுமென தொடந்து புகார்கள் கொடுத்து வந்தனர். இந்நிலையில் சட்டமன்ற உறுப்பினர் கடையநல்லூர் சட்டமன்றத்தொகுதி அவர்கள் நேரில் இந்நகராட்சிப்பகுதிக்கு வருகை தந்து வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள பகுதிகளில் ஆய்வு செய்த போது சாலைகளின் தன்மை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மேற்காணும் சாலைகளை உடன் செப்பனிட்டு பொதுமக்களின் சிரமத்தினை போக்கிட கோரியுள்ளார். மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருநெல்வேலி அவர்களின் நேரடி ஆய்வு மற்றும் அறிவுரையில் நகராட்சிப்பகுதிகளில் மிகவும் மோசமான பழுதடைந்த ஆபத்தான நிலையில் உள்ள சாலைகளையும் செப்பணிட தேவையான நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார்கள். அதனடிப்படையில் இந்நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டு பணிகள் முடிவடைந்து சேதமான சாலைகள், பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புகளை மாற்றியமைத்ததால் சேதமான சாலைகள் மற்றும் மழை போன்ற இயற்கை இடர்பாடுகளால் முற்றிலும் சேதமுற்ற சாலைகளை கணக்கீட்டு 6 சிப்பங்களாக மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் கி.மீ ல் | அகலம் மீட்டரில் | மதிப்பீடு ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.26 மேலக்கடையநல்லூர் மேற்கு மலம்பாட்டை சாலை செயினேஜ் அளவு 1.20 கி.மீ முதல் 4.00 கி.மீ வரை தார்சாலை அமைக்கும் பணி. | 2.800 | 5.00 மீ | 137.40 |
| 2 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27 மேலக்கடையநல்லூர் பழைய உரக்கிடங்கு முதல் நகராட்சி குடிநீர் தலைமைப்பணிடத்தை இணைக்கும் இணைப்பு சாலை தார்சாலை அமைக்கும் பணி. | 3.250 | 4.50 மீ | 178.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 25 கற்பகசுந்தரவிநாயகர் கோவில் தெரு, வார்டு எண். 33 கொழும்பு தெரு, வார்டு எண். 13 ஆசாத் தெரு, வார்டு எண்.22 இந்திரா நகர் புதிய காலனி தென்வடல் தெரு, வார்டு எண்.29 மதினாநகர் பிரதான தெரு மற்றும் வடக்குத் தெரு, வார்டு எண்.24 மாதாங்கோவில் தெரு, வார்டு எண்.25 பஜனைமடம் தென்வடல் தெரு, வார்டு எண்.6 முத்தாரம்மன்கோவில் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.27 தெற்கு ரத வீதி ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.495 | 4.00 மீ முதல் 6.00மீ வரை | 168.10 |
| 4 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.18(ம)20 அய்யாபுரம் தெற்குத்தெரு, வார்டு எண்.20 அட்டக்குளம் தெரு, வார்டு எண். 19 (ம) 20 பெரியதெரு, வார்டு எண்.16(ம) 20 புதுத்தெரு, வார்டு எண்.15 பரசுராமபுரம் வடக்குத்தெரு, வார்டு எண்.9 சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.5 கிருஷ்ணன்கோவில் தெரு, வார்டு எண்.14 அல்லி மூப்பன் தென்வடல் தெரு மற்றும் வார்டு எண்.1 குமந்தாபுரம் ஆதிதிராவிடர் தென்வடல் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.225 | 4.00 மீ முதல் 6.00மீ வரை | 170.20 |
| 5 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 2 மிட்டா ஆபிஸ் தெரு, வார்டு எண். 32 ரகுமானியாபுரம் தென்வடல் தெரு, வார்டு எண். 28 (ம) 31 அழகுமகுதணன் தென்வடல் தெரு, வார்டு எண். 30 ரைஸ்மில் தெரு, வார்டு எண். 21 காளியம்மன்கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.11 தந்தை பெரியார் தெரு, வார்டு எண். 12, 13 (ம) 14 குசவன் குன்று தென்வடல் தெரு, வார்டு எண்.11 பிள்ளையார் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண்.3 வ.உ.சி தெரு மற்றும் வார்டு எண்.4 செவல்விளைத்தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.905 | 4.00 மீ முதல் 5.00மீ வரை | 172.25 |
| 6 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 31 காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.10 காளியம்மன் கோவில் தென்வடல் தெரு, வார்டு எண். 17 புதூர் பள்ளிக்கூடம் தென்வடல் தெரு, வார்டு எண். 7 சேனையர் தெரு, வார்டு எண். 9 இல்லத்தார் வடக்குத் தெரு , வார்டு எண். 10 பள்ளிவாசல் தென்வடல் தெரு , மாவடிக்கால் மந்தை தென்வடல் தெரு, வார்டு எண்.11 மாவடிக்கால் சுடுகாடு ரோடு, வார்டு எண்.17 முப்புடாதியம்மன் கோவில் தெரு, வார்டு எண்.12 கல்வத்நாயகம் தெரு , வார்டு எண்.13 அல்லி மூப்பன் தெரு, வார்டு எண். 19 கலந்தர் மஸ்தான் தெரு மற்றும் வார்டு எண்.18 பெண்கள் பள்ளிக்கூடம் தெற்குத் தெரு ஆகிய தெருக்களில் தார் சாலை அமைக்கும் பணிகள் | 3.292 | 4.00 மீ முதல் 7.00மீ வரை | 174.05 |
| | **மொத்தம்** | **19.967** | | **1000.00** |

மேற்காணும் சாலை பணிகளை பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி செய்ய வேண்டியுள்ளதால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குமுமம் **(IUDM)**-2018–19ன் கீழ் சிறப்பினமாக கருதி அரசு மானியமாக சிறப்பு நிதி பெற்று மேற்காணும் சாலை பணிகளை செய்திட தயார் செய்யப்பட்டுள்ள திட்ட பிரேரணைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு திட்டபிரேரணை அனுப்பப்பட்டது.

அதனடிப்படையில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)-2018–19** ன் கீழ் இந்நகராட்சிப்பகுதியில் சாலைப்பணிகளை மேற்க்கொள்ள அனுப்பப்பட்ட திட்டபிரேரணைக்கு Minutes of the Third Project Sanctioning and Monitoring Committee meeting under Integrated Urban Development Mission (IUDM) **2018–2019** held on19.12.2018 அன்று அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.**16265/2018/**E1 நாள்.**28.01.2019** அன்று அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)-2018–19**ன் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ள தேர்வு செய்யப்பட்ட **6** சிப்பங்களில் உள்ள சாலைகளில் கீழ்காணும் விபரப்படி உள்ள சாலைகள் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் (TURIP)-2012-2013ன் கீழ் சாலைப்பணிகள் மேற்க்கொள்ளப்பட்டதில் ஊழல் முறைகேடு நடைபெற்றதாக தனிநபர் மூலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருநெல்வேலி அவர்களுக்கு புகார் அளிக்கப்பட்டு அதன்பேரில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருவதால் இச்சாலைகளில் அபிவிருத்தி பணிகள் **5** ஆண்டுகளுக்கும் மேலாக மேற்க்கொள்ள இயலாத நிலை உள்ளது.

| வ.எண். | வேலையின் பெயர் |
|---|---|
| 1. | வார்டு எண்.**1** குமந்தாபுரம் பள்ளிக்கூடம் தெரு, ஆதிதிராவிடர் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல். |
| 2. | வார்டு **2** கிருஷ்ணாபுரம் மிட்டா ஆபீஸ் தெரு தார்தளம் அமைத்தல். |
| 3. | வார்டு **3** கிருஷ்ணாபுரம் வ.உ.சி. தெரு, தார்தளம் அமைத்தல். |
| 4. | வார்டு **4** செவல்விளைத் தெரு மற்றும் ஓடை தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல். |
| 5. | வார்டு **5** கிருஷ்ணாபுரம் கிருஷ்ணன் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 6. | வார்டு **6** முத்துகிருஷ்ணாபுரம் சேனையர் தெரு தார்தளம் அமைத்தல் |
| 7. | வார்டு. **7** முத்துகிருஷ்ணாபுரம் முத்தாரம்மன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 8. | வார்டு **9** இல்லத்தார் வடக்கு தெரு மற்றும் இல்லத்தார் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 9. | வார்டு **10** பள்ளிவாசல் தென்வடல் தெரு மற்றும் காளியம்மன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 10. | வார்டு **11** தந்தை பெரியார் தெரு, பிள்ளையார் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 11. | வார்டு **12** கல்வத்நாயகம் தெரு, தார்தளம் அமைத்தல் |
| 12. | வார்ட **13** அல்லிமூப்பன்தெரு கிழக்கு பகுதி, குசவன்குன்று தென்வடல் தெரு மற்றும் இக்பால் நகர் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 13. | வார்டு **14** அல்லிமூப்பன் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 14. | வார்டு **15** பரசுராமபுரம் வடக்குத் தெரு, மற்றும் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 15. | வார்டு **16** பெரிய தெரு கீழ்பகுதி, மற்றும் புதுத் தெரு தார்தளம் அமைத்தல் |
| 16. | வார்டு **17** முப்புடாதியம்மன் கோவில் தெரு மற்றும் புதூர் பள்ளிக்கூடம் தெரு தார்தளம் அமைத்தல் |
| 17. | வார்டு **18** அய்யாபுரம் தெற்கு தெரு மற்றும் முப்புடாதியம்மன் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 18. | வார்டு **19** கலந்தர் மஸ்தான் தெரு தார்தளம் அமைத்தல் |

| | |
|---|---|
| 19. | வார்டு. 20 அட்டக்குளம் தெரு மற்றும் பெரிய தெரு மேல்பகுதி தார்தளம் அமைத்தல் |
| 20. | வார்டு 21 காளியம்மன் கோவில் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 21. | வார்டு 22 இந்திரா நகர் புதுக்காலனி தெரு தார்தளம் அமைத்தல் |
| 22. | வார்டு 24 மாதாங்கோவில் தெருக்கள் மற்றும் தென்டவல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 23. | வார்டு 25 பஜனைமடம் தெரு மற்றும் கற்பகசுந்தர விநாயகர் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 24. | வார்டு 27 தெற்கு ரதவீதி, கற்பகசுந்தரவிநாயகர் கோவில் தெரு தார்தளம் அமைத்தல் |
| 25. | வார்டு 29 மதினா நகர் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 26. | வார்டு 30 பேட்டை ரைஸ்மில் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 27. | வார்டு 31 காதர் மைதீன் பள்ளிவாசல் தெரு மற்றும் அழகுமகுதணன் தென்வடல் தெரு தார்தளம் அமைத்தல் |
| 28. | வார்டு 32 ரகுமானியாபுரம் தெருக்கள் தார்தளம் அமைத்தல் |
| 29. | வார்டு 33 கொழும்புச் செட்டியார் தெரு, மற்றும் மகாராஜபுரம் தெரு தார்தளம் அமைத்தல் |
| 30. | சிந்தாமதார் பள்ளிவாசல் தெரு தார்ச்சாலை அமைத்தல். |

மேற்காணும் விபரப்படி வரிசை எண்.1முதல் 30 வரையுள்ள தெருக்களில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுதிட்டம் 2012–2013ன் கீழ் சாலைப்பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேல் ஆன நிலையிலும், புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் (kfw) கீழ் ரூ.21.41 கோடி மதிப்பீட்டில் பகிர்மான குழாய்கள் அனைத்து தெருக்களிலும் பதிக்கப்பட்டும் பதிக்கப்பட்ட பகிர்மான குழாய்களில் வீட்டு இணைப்புளை மாற்றியமைத்ததால் சாலைகள் மிகவும் சேதமுற்று குண்டும் குழியுமாக பொதுமக்கள் பயன்படுத்த முடியாத ஆபத்தான நிலையில் உள்ளது. ஆகவே பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் **(IUDM)-2018–19**ன் கீழ் இந்நகராட்சிப்பகுதியில் சாலைப்பணிகளை ரூ.1000.00 மதிப்பீட்டில் மேற்க்கொள்ள அனுப்பப்பட்ட திட்டபிரேரணைக்கு Minutes of the Third Project Sanctioning and Monitoring Committee meeting under Integrated Urban Development Mission (**IUDM**) 2018–2019 held on19.12.2018 அன்று அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.16265/2018/E1 நாள்.28.01.2019 அன்று அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதால் தலைமைபொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதிப்பெற்று ஒப்பந்தப்புள்ளி நடிவடிக்கைகள் மேற்க்கொள்ளவும் தனி அலுவலர் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டுதிட்டம் 2012–2013ன் கீழ் மேற்க்கொள்ளப்பட்ட 36 சாலைகள் ஆபத்தான நிலையில் உள்ளதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு சாலைகளை செப்பனிட அரசிடமிருந்து நிதி பெற்று தேவையான நடிவடிக்கைகள் மேற்க்கொள்ளவதற்கு ஏதுவாக தடையில்லாச்சான்று **(NOC)** வழங்க கேட்டு இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம், சென்னை அவர்களுக்கு 22.10.2018 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது விபரம் தனிஅலுவலரின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3937/2018/இ1)**

**<u>தீர்மானம் எண். 10</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–11</u>**

தூய்மை இந்தியா திட்டம் (SBM)2015–2016 மற்றும் 2018–2019ன் கீழ் நுண்ணிய உரக்குடில்களுக்கு (MCC) தேவையான Lisht commeriacal (LCV) மற்றும் Battery Operative vehicle (BOV) விநியோகம்

செய்யும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மற்றும் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி அவர்களின் வழியாக மாவட்ட அளவில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவீனத் தொகைக்கும் அங்கீகாரம் வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 5572/2015/இ1)**

**<u>தீர்மானம் எண். 11</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–12</u>**

இந்நகராட்சி தாமிரபரணி SUMPல் குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின் மூலம் பொருத்தப்பட்டுள்ள 25.00HP Sub motor-2 எண்ணம் Coil cut ஆகி இயக்க முடியாத நிலையில் உள்ளது. இந்த மோட்டர் மூலம் இந்திரா நகர் Tank மற்றும் fire Station tank-க்கு Pumping செய்யப்படுகிறது. மேலும் Sumpல் உள்ள மோட்டாரினை இரவு நேரங்களில் Sumpல் Water level குறைந்து விடுவதை கண்டறிய water level Indicater பொருத்தி இயக்கினால் மேற்காணும் மோட்டரானது Automatic ஆக கட் ஆகிவிடும் என்பதால் பாதுகாப்பாகவும் இருக்கும். ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் பகுதியிலுள்ள 25.00HP Sub motor இரண்டு எண்ணத்தை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் water level Indicater புதிதாக பொருத்தவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகைரூ.2.20க்கு இலட்சத்திற்கு அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 19/2019/இ1)**

**<u>தீர்மானம் எண். 12</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்–13</u>**

இந்நகராட்சி வருவாய் வரத்தக்க குத்தகை இனம் இரயில்வே பீடர் ரோட்டிலுள்ள புளியமரங்களின் மேல் மகசூல் அனுபவிக்கும் உரிமம் (ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு)11.01.2019 அன்று எட்டாவது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கேட்கப்பட்ட ஏலக்கேள்விகள் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் விபரம் | ஓராண்டுக்கு குத்தகை ஏலக்கேள்வி |
|---|---|---|
| 1. | திரு.காளிராசு,<br>த/பெ.தங்கராஜ்,<br>187/166, புதுமனை தெரு,<br>காசிதர்மம். | ரூ.4500/– |
| 2. | திரு.முருகையா,<br>த/பெ.இராமையா,<br>77, வடக்கு தெரு,<br>குமாந்தபுரம், கடையநல்லூர். | ரூ.5000/– |

மேற்கண்ட ஏலக்கேள்விகளில் வரிசை எண்.2ல் குறிப்பிட்டுள்ள திரு.முருகையா என்பவரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.5000/– 2017–18ம் ஆண்டு குத்தகை தொகை ரூ.6250/–ஐ விட குறைவாக உள்ளது. மேலும் தொடர்ந்து 8 முறை ஏலம் கோரியும் யாரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் நகராட்சியின் வருமானத்தினை பெருக்கும் விதமாக அன்னாரின் உச்ச ஏலக்கேள்வியினை ஏற்று 01.02.2019 முதல் மூன்றாண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்க அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 4003 /2019/அ3)**

**<u>தீர்மானம் எண். 13</u>**

அங்கீகரிக்கப்படுகிறது.

**தனிஅலுவலர்,**
**கடையநல்லூர்நகராட்சி.**